பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
01 10 2023 **SUNDAY** 6 45 **AM**
வணக்கம், ஆல் இண்டியா ரேடியோ, சென்னை – மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தூய்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் நாடுதழுவிய மாபெரும் தூய்மை இயக்கத்திற்கு இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2. மருந்து உற்பத்தியில் தன்னிறைவு அடைவதுடன், மூலப்பொருள் ஏற்றுமதியில் இந்தியா முன்னிலை வகிக்கும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. தேசிய ரத்ததான தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

4. குன்னூர் பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

5. 19 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்துப் போட்டியில் இந்தியா சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது..

>>>>><<<<<

காந்தி ஜெயந்தி நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, தேசப்பிதா மகாத்மா காந்திக்கு மரியாதை செலுத்தும் வகையில், இன்று நாடுதழுவிய மாபெரும் தூய்மை இயக்கத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பான மன்கிபாத் நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, தூய்மையே சேவை இயக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருந்ததுடன், இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் தூய்மை இயக்கத்தில் மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தார்.

இதனிடையே, புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி, நாடுமுழுவதும் 6 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவித்தார்.

தூய்மை இந்தியா இயக்கத்தின் மூலம், நாடுமுழுவதும் 4 ஆயிரத்து 800-க்கும் அதிகமான நகர்ப்புறங்கள் 100 சதவீதம் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நகரங்களாக மாறியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையும் இந்த தூய்மைப் பணியில் பங்கேற்கவுள்ளதாக அவர் கூறினார்.

மக்கள் அதிகமாக கூடும் ரயில் நிலையங்கள், சுற்றுலா மற்றும் வழிபாட்டு தலங்களில் தூய்மைப் பணிகளில் ஈடுபடுவதை மக்கள் தங்கள் வாழ்வில் ஒரு அங்கமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

மருந்து உற்பத்தியில் தன்னிறைவு அடைவதுடன், அடுத்த பத்தாண்டுகளில் மருந்து உற்பத்திக்கான மூலப் பொருட்களின் ஏற்றுமதியிலும் இந்தியா முன்னிலை வகிக்கும் என உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அஹமதாபாதில் உள்ள தேசிய மருந்து உற்பத்தி தொடர்பான கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள நிரந்தர வளாகத்தை அவர் திறந்து வைத்து பேசினார்.

நாட்டில் மருந்து உற்பத்திக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் தன்னிறைவை எட்ட, இந்த கல்வி நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கும் என்று அவர் கூறினார்.

நாடுமுழுவதும் மருந்து மற்றும் மருத்துவ உபரணங்கள் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வகையில், மருந்து உற்பத்தி நிறுவனங்களை அமைப்பதில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா, நாட்டில் மருந்து உற்பத்தியை முன்னெப்போதும் இல்லாத அளவில் அதிகரிக்கச் செய்யும் வகையில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர்கள் திரு. பூபேந்திர பட்டேல், உயிரி மருத்துவ ஆராய்ச்சியில், இளம் தலைமுறையினருக்கு இந்த கல்வி நிறுவனம் பல்வேறு வாய்ப்புகளை வழங்கும் என்று தெரிவித்தார்.

>>>>><<<<<

கருத்து சுதந்திரம் என்பது வன்முறையை தூண்டும் வகையில் இருக்கக்கூடாது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காலிஸ்தான் தீவிரவாத அமைப்பிற்கு கனடா ஆதரவு அளிப்பது வன்முறை மற்றும் பயங்கரவாத செயல்களுக்கு துணை போவது போல் அமையும் என்று கூறினார்.

பயங்கரவாத செயல்களுக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்திருப்பது, இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை வெளிப்படுத்துவதாக உள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

தேசிய ரத்த தான தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இவ்வாண்டு ரத்ததான தினத்தின் கருப்பொருள், ரத்ததானம் மட்டுமின்றி பிளாஸ்மா தானமும் செய்வோம், வாழ்வை பகிர்ந்து கொள்வோம் என்பதாகும்.

இந்நாளையொட்டி, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 18 வயது முதல் 65 வயதுவரையுள்ள ஆரோக்கியமான அனைவரும் 3 மாதத்திற்கு ஒருமுறை ரத்ததானம் செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

உரிய கால இடைவெளியில் ரத்த தானம் செய்வதால் உடலில் புதிய செல்கள் உருவாகி, உடல்நலம் காக்கப்படுகிறது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

நடப்பாண்டில் தமிழ்நாடு, தன்னார்வ ரத்ததானத்தில் 100 சதவீத இலக்கை எட்டியுள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் ஆயிரம் இடங்களில் டெங்கு மற்றும் மழைக்கால நோய்த் தடுப்புக்காக சிறப்பு மருத்துவ முகாம்கள் இன்று நடைபெறும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுகாதாரத்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து கொசு ஒழிப்பு, நோய்த் தடுப்பு போன்ற பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மூலம் மாநிலத்தில் தொற்று நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மாநிலத்தில் 2 ஆயிரத்து 972 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டு, நோய்த் தடுப்பு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நோய்த்தடுப்பு பணிகளில் 23 ஆயிரத்து 717 தற்காலிகப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு தேவையான உயிர் காக்கும் மருந்துகள், பரிசோதனைக் கருவிகள், ரத்தம் ஆகியவற்றை போதிய அளவில் இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இத்தகைய நோய்த் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடத்தப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

நீலகிரி மாவட்டம், குன்னூர் பரளியாறு அருகே தனியார் சுற்றுலா பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாயும் நிதியுதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு அவர் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

இந்தியா கிராமப்புறங்களில் வாழ்கிறது என்ற மகாத்மா காந்தியின் கூற்றுக்கு ஏற்ப அவரது பிறந்த தினமான அக்டோபர் 2ஆம் தேதியன்று, அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெறவுள்ள கிராமசபைக் கூட்டங்களில் மக்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மக்களாட்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் கிராம ஊராட்சிகளில் ஆண்டுதோறும் 4 முறை நடைபெற்று வந்த கிராமசபைக் கூட்டங்கள், 6–ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைவரையும் உள்ளடக்கிய வகையில் மக்கள் நலனை மையமாக கொண்டு உள்ளாட்சி நிர்வாகத்தை உறுதி செய்யும் வகையில் இந்த கிராமசபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உலகம் முழுவதும் மூத்த குடிமக்களை மதித்து நடப்பது, குடும்பம், சமூகம் மற்றும் நாட்டிற்கு அவர்கள் அளித்த சேவைகளை மக்களுக்கு எடுத்துரைக்கும் விதத்தில் ஆண்டுதோறும் அக்டோபர் 1ஆம் தேதி சர்வதேச முதியோர் தினம் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது.

இதுகுறித்த ஒரு செய்தித்தொகுப்பு. . . .

(சவுண்ட் பைட் - மருத்துவர் செந்தில் 37 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

இருதய நோயாளிகளுக்கான வாழ்வியல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மருத்துவர்கள் ஊக்குவிக்க முன்வர வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை செயலர் திரு. **Sudhansh Pant** கேட்டுக் கொண்டுள்ளார்.

மருத்துவர்களுக்கான இணையவழி கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய அவர், சுகாதார கொள்கை, நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும் வகையில் அமைய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய எய்ம்ஸ் மருத்துவமனையின் இருதயப் பிரிவு தலைவர் டாக்டர் பல்ராம் பார்கவா, இருதய நோய்களிலிருந்து பாதுகாக்கும் வகையில், ரத்தக் கொதிப்பு குறித்த பரிசோதனையின் மூலம், தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நோயாளிகள் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த இணையவழி கருத்தரங்கில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

>>>>><<<<<

அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையில் நிதி நெருக்கடியை தவிர்க்கும் வகையில் தற்காலிக நிதி மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.

>>>>><<<<<

**Nagorno - Karabakh** பகுதியை அஸர்பைஜான் கைப்பற்றியுள்ளதை அடுத்து, அங்கு வசித்து வரும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வெளியேறியுள்ளதாக **Armenia** அரசு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

மாலத்தீவின் புதிய அதிபராக திரு. **Mohamed Muizzu** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

>>>>><<<<<

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஒன்றியத்தில் மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்ட சிறப்பு முகாம் மற்றும் சுகாதாரத் திருவிழா நேற்று நடைபெற்றது.

>>>>><<<<<

தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் மெயின் அருவி மற்றும் ஐந்தருவிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக, பாதுகாப்பு கருதி, சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

19 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்துப் போட்டியில் இந்தியா சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

காத்மண்டுவில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்தியா 3-0 என்ற கோல்கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

இப்போட்டியில் இந்தியா தொடர்ந்து, இரண்டாவது முறையாக கோப்பையை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

ஆசிய விளையாட்டுப் போட்டியில், ஆடவர் பேட்மிண்டன் குழுப் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

மகளிர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Preeti, Lovlina Borgohain, Nikhat Zareen** ஆகியோர் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர். இதன்மூலம் இவர்கள் ஒலிம்பிக் போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளனர்.

இப்போட்டியில் 10 தங்கம், 14 வெள்ளி, 14 வெண்கல பதக்கங்களுடன், பதக்கப்பட்டியலில் இந்தியா 5வது இடத்தில் உள்ளது.

>>>>>**END**<<<<<